# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2361/13 - 2023 දෙසැම්බර් මස 05 වැනි අඟහරුවාදා - 2023.12.05

*2361/13 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 9/73* (XII)(அ)

**(469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னிஆரச்சி ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி இடப்பரப்பை சரணாலயம் ஒன்றாக இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துவதுடன் அத்தகைய சரணாலயம் ஆனது, “நாரங்கல சரணாலயம்” என அறியப்படுத்தல் வேண்டும் என்பதை மேலும் வெளிப்படுத்துகின்றேன்.

**பவித்ரா வன்னிஆரச்சி,**
வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2023, நவெம்பர் 28*

**அட்டவணை**

"நாரங்கல சரணாலயம்" உள்ளடக்கியுள்ள காணி இடப்பரப்பின் எல்லைகள்

*ஊவா மாகாணத்திலுள்ள பதுளை மாவட்டத்தில் சொரணாதொட்ட பிரதேச செயலாளர் பிரிவினுள் முறையே லெஜர்வத்த (27C) இடமெகம (27B) மற்றும் திக்பிட்டிய (36A) கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த முத்தெட்டுவேகம் (இ. கி. வ. 371) இடமேகம (இ. தி. வ. 370) மற்றும் கும்புக்வெல (347) ஆகிய கிராமங்களில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் திணைக்களத்தின் வரைபடத்துக்கிணங்க தயாரிக்கப்பட்டதும் 2021, சனவரியிலிருந்து 2021 பெப்புருவரி வரை திகதியிடப்பட்ட சுவடி எடுப்பு இல. B/SRN/2020/464 இலுள்ள காணித்துண்டு இல. A, B, C, D, E, F, G, H, J, K, L, M, N, P, Q, R, S, T, U, V மற்றும் W என்பனவாக குறித்துக்காட்டப்பட்ட 239.2761 ஹெக்டேயர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணிப்பரப்பு யாவும்.*

EOG *12-0055*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.